குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,
திண்டுக்கல்.
முன்னிலை: திரு.S.பாக்கியராஜ், பி.எஸ்சி, பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்.

STC No. 1856/2025

**2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 5 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**CNR.No.TNDG03-003654-2025**

அரசுக்காக
சார்பு ஆய்வாளர்,
திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம்
குற்ற எண்.196/2025

//எதிராக//

ராஜபாண்டி (30/2026)
த/பெ. தங்கராஜ்,
வடக்கு தெரு, A. ராமநாதபுரம்,
நடுப்பட்டி போஸ்ட்,
சின்னாளப்பட்டி, ஆத்துார் தாலுகா,
திண்டுக்கல்

**Case – Summary**

| S.No | Description | Details | | |
|---|---|---|---|---|
| 1. | The Date of remand of the accused | 11.04.2025 | | |
| 2. | The date of filing of the complaint/final report in the court | 25.06.2025 | | |
| 3. | The date of committal of the case to the court of sessions | Not applicable. | | |
| 4. | The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the code of Criminal procedure, 1973 as the case may be | 15.05.2026 (S.251 Crpc) | | |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under section 317 of the code | - | | |
| 6. | The date of examination – in chief and cross-examination of a witness | Witnesses | Examined in – Chief | Examined - in Cross |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW1 | 05.06.2026 | 05.06.2026 |
| | | PW2 | 05.06.2026 | 05.06.2026 |
| | | PW3 | 05.06.2026 | 05.06.2026 |
| | | PW4 | 05.06.2026 | 05.06.2026 |
| 7. | The date of examination of the accused under section 313 of the code | 05.06.2026 | | |
| 8. | Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be | - | | |
| 9. | Grant of stay by superior courts and the results thereof | - | | |

இவ்வழக்கு 25.06.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் தாமே முன்னிலையாகி ஏற்று நடத்திய வழக்கில் இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இன்று வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 11.04.2025 ம் தேதி 19.30 மணிக்கு திண்டுக்கல் வத்தலகுண்டு பைபாஸ் அருகே எதிரி ராஜபாண்டி என்பவர் எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாபம் தேடும் நோக்கில் 180 ML கொள்ளவுகொண்ட Express Brandy – 13, MGM Diamond XXX Rum – 13 பாட்டில்களை சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்த எதிரியின் குற்றசெய்கையானது 4(1)(c) TNP Act– ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு 230 BNSS ன் கீழ் வழங்கப்பட்டது. எதிரி மீது பிரிவு 4(1)(c) TNP ACT ன் கீழான குற்றம் பற்றி விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி மறுத்து குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே, வழக்கு விசாரணைக்காக வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

3. எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ 3 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்.**

கடந்த 11.04.2025 ம் தேதி சார்பு ஆய்வாளர் அங்கமுத்து நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண். 196/2025 U/s.4(1)(C) TNP Act வழக்குகோப்பு , எதிரி மற்றும் வழக்குச்சொத்துக்களை தனது பார்வைக்கு வைத்ததை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் சுரேஷ், விவேக், கருப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை கைது செய்து ஜாமீனில் விடுவித்தார். மதுபாட்டில்களை உயர் அதிகாரரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்த அழிப்பு சான்று தயார் செய்தார். பின்னர் இவ்வழக்கின் தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமானவற்றை தொகுத்து எதிரியிடம் 351(1)(பி) of BNSS–ன் படி வினவியபோது எதிரி அவைகளை மறுத்து, பொய் சாட்சியம் என்று கூறினார். பின்னர் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

6. இவ்வழக்கில் பரிசீலனைக்குரிய விசயம் யாதெனில், எதிரி மீதான பிரிவு 4(1)(c)TNP Act ன் – ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதுவேயாகும்.

7. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 4(1)(c)TNP Act ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது.

9. இவ்வழக்கில் அ.சா.1 சுரேஷ் தலைமை காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 11.04.2025–ம் தேதி 19.30 மணிக்கு தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கருப்பையா, முதல் நிலை காவலர் விவேக் ஆகியோர்களுடன் குற்றத்தடுப்பு மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக திண்டுக்கல், வத்தலக்குண்டு பைபாஸ் அருகே சென்றபோது இவ்வழக்கின் ஆஜர் எதிரி ராஜபாண்டி அரசு அனுமதியின்றி சுய லாபத்திற்காக 180 ML அளவுள்ள Express Brandy–13, MGM Diamond XXX Rum–13 மதுபானபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக தன்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை கைது செய்து 19.40 மணிக்கு கைது செய்து

மதுப்பாட்டில்களை தனிநபர்கள் சாட்சிகள் யாரும் இல்லாததால் 19.50 மணிக்கு வழக்குச்சொத்தை கைப்பற்றி 20.15 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் கருப்பையா இதுசம்மந்தமாக எதிரி மீது நிலைய குற்ற எண்.196/2025 U/s.4(1)(C) TNP Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியமளித்துள்ளார். **மேலும் அவர் தனது குறுக்கு விசாரணையில்** " இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமுலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக வைத்திருந்ததாக என்னிடம் சொன்னார் என்று நான் சார்பு ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்று நான் 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு அருகே நிறைய மக்கள் குடியிருப்புகள் மற்றும் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ தேதியில் மதுபாட்டில்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. " என குறிப்பிடப்பட்டுள்ளது.

10. இவ்வழக்கில் சாட்சியான அ.சா.2 விவேக் முதல் நிலைக் காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 11.04.2025–ம் தேதி 19.30 மணிக்கு தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கருப்பையா, தலைமை காவலர் சுரேஷ் ஆகியோர்களுடன் குற்றத்தடுப்பு மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக திண்டுக்கல், வத்தலக்குண்டு பைபாஸ் அருகே சென்றபோது இவ்வழக்கின் ஆஜர் எதிரி ராஜபாண்டி அரசு அனுமதியின்றி சுய லாபத்திற்காக 180 ML அளவுள்ள Express Brandy–13, MGM

Diamond XXX Rum-13 மதுபானபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக தன்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை கைது செய்து 19.40 மணிக்கு கைது செய்து மதுப்பாட்டில்களை தனிநபர்கள் சாட்சிகள் யாரும் இல்லாததால் 19.50 மணிக்கு வழக்குச்சொத்தை கைப்பற்றி 20.15 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் கருப்பையா இதுசம்மந்தமாக எதிரி மீது நிலைய குற்ற எண்.196/2025 U/s.4(1)(C) TNP Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியமளித்துள்ளார். **மேலும் அவர் தனது குறுக்கு விசாரணையில்** " இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக வைத்திருந்ததாக என்னிடம் சொன்னார் என்று நான் சார்பு ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்று நான் 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு அருகே நிறைய மக்கள் குடியிருப்புகள் மற்றும் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ தேதியில் மதுபாட்டில்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. " என குறிப்பிடப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கில் அ.சா.3 கருப்பையா சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 11.04.2025-ம் தேதி 19.30 மணிக்கு நானும் தலைமை காவலர் சுரேஷ், முதல் நிலை காவலர் விவேக் ஆகியோர்களுடன் குற்றத்தடுப்பு மற்றும் மதுவிலக்கு சம்மந்தமாக திண்டுக்கல்,

வத்தலக்குண்டு பைபாஸ் அருகே சென்றபோது இவ்வழக்கின் ஆஜர் எதிரி ராஜபாண்டி அரசு அனுமதியின்றி சுய லாபத்திற்காக 180 ML அளவுள்ள Express Brandy-13, MGM Diamond XXX Rum-13 மதுபானபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக தன்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை கைது செய்து 19.40 மணிக்கு கைது செய்து மதுப்பாட்டில்களை தனிநபர்கள் சாட்சிகள் யாரும் இல்லாததால் 19.50 மணிக்கு வழக்குச்சொத்தை கைப்பற்றி 20.15 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து தான் இதுசம்மந்தமாக எதிரி மீது நிலைய குற்ற எண்.196/2025 U/s.4(1)(C) TNP Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்குகோப்பு எதிரி மற்றும் வழக்குச்சொத்தை சார்பு ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியமளித்துள்ளார். **மேலும் அவர் தனது குறுக்கு விசாரணையில்** " இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமுலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக வைத்திருந்ததாக என்னிடம் சொன்னார் என்று நான் சார்பு ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்று நான் 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு அருகே நிறைய மக்கள் குடியிருப்புகள் மற்றும் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ தேதியில் மதுபாட்டில்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. " என குறிப்பிடப்பட்டுள்ளது.

12. அ.சா.4 சார்பு ஆய்வாளர் திரு. அங்கமுத்து தனது சாட்சியத்தில் கடந்த 11.04.2025 ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண்.

196/2025 U/s.4(1)(C) TNP Act வழக்குகோப்பு , எதிரி மற்றும் வழக்குச்சொத்துக்களை தனது பார்வைக்கு வைத்ததை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் சுரேஷ், விவேக், கருப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை கைது செய்து ஜாமீனில் விடுவித்தார். மதுபாட்டில்களை உயர் அதிகாரரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்த அழிப்பு சான்று தயார் செய்தார். பின்னர் இவ்வழக்கின் தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். **மேலும் அவர் தனது குறுக்கு விசாரணையில்** " இவ்வழக்கின் சம்பவ இடமானது பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் பொதுமக்கள் குடியிருப்பு அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அசா1 முதல் அசா3 வரை உள்ள சாட்சிகள் அனைவரும் எனக்கு கீழ் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மதுபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக எதிரி வைத்திருப்பதாக என்னிடம் எதிரி சொன்னதாக முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சம்பவத்தேதியில் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் வழக்கின் ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. " என குறிப்பிடப்பட்டுள்ளது.

13. இவ்வழக்கில் எதிரி கடந்த 11.04.2025 ம் தேதி 19.30 மணிக்கு திண்டுக்கல் வத்தலகுண்டு பைபாஸ் அருகே எதிரி ராஜபாண்டி என்பவர் எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாபம் தேடும் நோக்கில் 180 ML கொள்ளவுகொண்ட Express Brandy – 13, MGM Diamond XXX Rum – 13 பாட்டில்களை சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியமளித்துள்ளனர். மேலும், சம்பவயிடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியாக இருந்த போதிலும், தனிநபர் சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் தனிநபர் யாரும் சம்பவம் தொடர்பாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. வழக்கில் புகார், ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை. மேலும், வழக்கு சொத்து அழிக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவு நகல் தாக்கல் செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து பகுப்பாய்வுக்கு அனுப்பாமல் இவ்வழக்கில் புலன்விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதை பார்க்கும்போது, அரசுத் தரப்பு வழக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே அரசு தரப்பில் எழும் சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. முடிவாக எதிரி மீது பிரிவு 4(1)(c) TNP Act –ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரி 4(1)(c) TNP Act –ன் ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை 271 (1) BNSS பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

15. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தால், அது குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜீன் 5 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்புரை என்னால் பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.06.05 17:37:06 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 திரு. சுரேஷ் (தலைமை காவலர்)

அ.சா.2. திரு. விவேக் (முதல் நிலை காவலர்)

அ.சா.3 திரு. கருப்பையா (சிறப்பு சார்பு ஆய்வாளர்)

அ.சா.4. திரு. அங்கமுத்து (சார்பு ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ எண். | தேதி | சான்றாவணங்கள் |
|---|---|---|
| 1 | 11.04.2025 | அத்தாட்சி |
| 2 | 11.04.2025 | முதல் தகவல் அறிக்கை |

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.06.05 17:37:21 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

**குறிப்பு–**

1. இந்த வழக்கில் எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இந்த வழக்கில் சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை.